**கிராமின் கிருஷி மவுசம் சேவா**

இந்திய வானிலை துறை

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்

கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 17-10-2023**

**புதுக்கோட்டை(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2023-10-17 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2023-10-18 | 2023-10-19 | 2023-10-20 | 2023-10-21 | 2023-10-22 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 18.0 | 0.0 | 5.0 | 4.0 | 10.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 32.0 | 32.0 | 32.0 | 31.0 | 31.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 24.0 | 24.0 | 24.0 | 23.0 | 23.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 95 | 95 | 95 | 92 | 92 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 76 | 76 | 76 | 74 | 74 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 15 | 15 | 15 | 12 | 12 |
| காற்றின் திசை (கோணம்) | 90 | 90 | 90 | 110 | 110 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 8 | 8 | 8 | 7 | 7 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

அக்டோபர் மூன்றாவது வாரத்தில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்ப நிலை 31.0°C - 32.0°C எனும் வேறுபாட்டிலும், குறைந்தபட்ச வெப்ப நிலை 23.0°C - 24.0°C. வேறுபாட்டிலும் இருக்கும். வானம் அடுத்த ஐந்து நாட்களுக்கு மேகமூட்டத்துடன் காணப்படும். காற்றின் வேகம் மணிக்கு 12 - 15 கிலோமீட்டர் வேகம் இருக்கும் என எதிர்பார்க்கலாம்.

## பொது ஆலோசனை:

மழை எதிர்பார்க்கப்படுவதால் போதிய வடிகால் வசதி மேற்கொள்ளவும் மற்றும் நீர் பாசனத்தை ஒத்திவைக்கவும். மேகமூட்டம் காரணமாக பருத்தியில் தழைவளர்ச்சியனைக் கட்டுப்படுத்த 15 வது கணுவிற்குமேல் கிள்ளி விடவும்.

## குறுஞ்செய்தி :

தொடர்ந்து மழை எதிர்பார்க்கப்படுவதால் விவசாயிகள் வரத்து வாய்க்கால்கள் மற்றும் நீர்நிலை சுத்தம் செய்து மழைநீர் சேமிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்.

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| நெல் | தற்போது நிலவி வரும் பருவ சூழ்நிலையில் தண்ணீர் வடிய வாய்ப்பில்லாத இடங்களில் நெல் பயிரில் துத்தநாகம் மற்றும் தழை சத்து பற்றாக்குறை ஏற்பட வாய்ப்புள்ளது. அறிகுறிகள் - இளம் மஞ்சள் நேர்கோடுகள் வளர் இலையில் காணப்படும். இலையின் அடிப்பாகம் பச்சையாக இருக்கும் - கதிரில் மணிபிடித்தல் குறைந்து காணப்படும் இதை சரி செய்ய ஒரு ஏக்கருக்கு 2 கிலோ யூரியா ஒரு சதம் ஒரு கிலோ ஜிங்க சலபேட்டை (0.5%) கலந்து இலை வழியாக மழை நின்றவுடன் தெளிக்க வேண்டும் தேவையெனில் 15 நாட்கள் கழித்து மீண்டும் ஒரு முறை தெளிக்க வேண்டும். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பாகற்காய் | தொடர்ந்து மேகமூட்டமான வானிலை காரணமாக. கொடிவகை காய்கறி பயிர்களில் சாம்பல் நோய் பரவலாகக் காணப்படும். இதனை கட்டுப்படுத்த டைனோகாப் @ 1 மில்லி / அல்லது கார்பென்டாசிம் 0.5 கிராம் / தெளிக்கவும். |
| தக்காளி | மிதமான மழை எதிர்பார்க்கப்படுவதால் தக்காளியில் வீரிய ஒட்டு ரகங்களுக்கு 20 மீட்டர் உயரமுள்ள மூங்கில் குச்சிகளை பயன்படுத்தி முட்டு கொடுக்க வேண்டும் இதனால் பழங்கள் மழைக்காலங்களில் மண்ணை தொட்டு அழுகுவது தவிர்க்கப்படுகிறது. |

## உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை:

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பசு | மழை காலங்களில் வெப்பநிலை மாற்றத்தை எதிர்கொள்ளவும் நோய் எதிர்ப்பாற்றலை பெருக்கவும், மழையினால் பால் உற்பத்தி குறையாமல் இருக்கவும், கறவை மாடுகளுக்கு உலர் தீவனத்தை தேவையான அளவு (ஆதாவது மாட்டின் எடையில் 3%) அளவு கொடுக்கவேண்டும். |

## பிற ( மண்/ நில தயாரிப்பு) குறிப்பிட்ட ஆலோசனை:

| பிற ( மண்/ நில தயாரிப்பு) | பிற ( மண்/ நில தயாரிப்பு) குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பொது ஆலோசனை | வயலின் சரிமானத்திற்கு ஏற்றவாறு குறிப்பிட்ட இடைவெளியில் குறுகிய வடிவிலோ அகலமான வடிவிலோ வரப்புகளை அமைத்து மண் அரிமானத்தை தடுக்கலாம். இத்தகைய வரப்புக்களினால் தடுக்கப்படும் மழைநீரை தேக்கி வைக்கப்படுவதால் மண்ணின் அடி ஆழம் வரை ஊடுருவி உள்ளே இறங்கி நிலத்தடி நீராக சேமிக்கப்படுகிறது . |
| பொது ஆலோசனை | 2% டி.எ.பி (20கிராம் /லிட்டர் தண்ணீர்) கரைசலை பூக்கும் தருணத்தில் தெளிக்கவேண்டும். இதனால் பூக்கள் நன்கு பிடித்து பயறு வகைப் பயிரில் நல்ல விளைச்சலும் தரமான மகசூல் பெறலாம். |